மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரில் மழை நீரைச் சேமிக்கும் திட்டத்தின் பயனைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் சென்னைக் குடிநீர் வாரியம் ஒலி மற்றும் ஒளிப்பதிவின் மூலம் நாடாக்களைத் தயாரித்து சென்னைத் தொலைக்காட்சி நிலையம் மூலம் பொதுமக்களுக்கு திரையிட்டு வருகிறது. இதுவரை இதனைச் செயதிப்படமாகத் தயாரித்து, திரையரங்குகள் மூலம் வெளியிடவில்லை. மேலும், 'மழை நீரை எப்படிச் சேமிப்பது' என்பதை விளக்குகின்ற வகையிலே 'படங்களும் செய்முறைகளும்' என்கிற தலைப்பிலே விளக்கக் குறிப்புகள் கொண்ட கையேடுகள், சென்னைப் பெருநகர குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தின் மூலம் தயாரித்து வழங்கப்பட்டிருக்கிறது என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்தில் உள்ள மக்கள் எவ்வாறு மழைத் தண்ணீரைச் சேமிப்பது என்ற கருத்தை தெரிந்து கொள்ள செய்திப்படமாக இந்த ஆண்டு தயாரிக்காவிட்டாலும் அடுத்த ஆண்டாவது தயாரித்துத் திரையிட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை நீரைச் சேமிப்பது எப்படி என்பதைப் பற்றித் தெரிவிக்கின்ற வகையிலே படம் எடுக்கப்படவேண்டுமென்று சம்பந்தப்பட்ட துறை நிதி ஒதுக்கீடு செய்யுமேயானால், செய்தித் துறையின் திரைப்படப் பிரிவின் மூலம் அந்தப் படத்தை எடுத்து வெளியிடுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 16, திருமதி இலதா பிரியகுமார், இருக்கையில் இல்லை.

வினா எண் 17, திரு. காஞ்சி பன்னீர்செல்வம், மாண்புமிகு கல்வியமைச்சர்.

17—

உத்திரமேரூர் மற்றும் வாலாஜாபாத் பகுதிகளில் கலலூரிகள் அமைத்தல்.

35946*—திரு. காஞ்சி பன்னீர்செல்வம்:**

1994 நவம்பர் 4]

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், உத்திரமேரூர், வாலாஜாபாத் ஆகிய பகுதிகளில் கல்லூரிகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதயதெய்வம் அவர்களுடைய ஆட்சியில் இல்லை என்பது இல்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. செங்கை எம்.ஜி.ஆர். மாவட்த்திலே கல்லூரிகள் என்று சொன்னால், மாவட்டத் தலைநகரான காஞ்சிபுரத்தில்தான் ஆண்கள் கல்லூரியும் பெண்கள் கல்லூரியும் இருக்கின்றன. பச்சையப்பன் ஆடவர் கல்லூரி, பெண்கள் கல்லூரி என்று. அதற்கடுத்து, அந்த மாவட்டத்தின் வேறு பகுதிகளில் இருந்து மாணவர்கள் படிக்கவேண்டும் என்றால், ஒன்று வட ஆற்காடு மாவட்டம் செய்யாறுக்குப் போய்ப் படிக்க வேண்டிய சூழ்நிலைதான் இருக்கிறது. வேறு இடத்திலே அந்த மாவட்டத்திலே கல்லூரி இல்லாத காரணத்தால்—மதுராந்தகம்—அச்சிறுபாக்கத்திற்கு நடுவே இருக்கிற என்னுடைய தொகுதியான உத்திரமேரூர் பகுதியிலே கல்லூரி இல்லை. அது மட்டுமல்லாமல்—அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுக்கும் வசதியாக இருக்கின்ற அளவிலே அங்கே ஒரு கல்லூரியை ஏற்படுத்தித் தருவதற்கு, நம்முடைய இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முனவருமா என்பதை அமைச்சர் அவர்களிடத்திலேயிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் தற்போதைய நிதி நெருக்கடியில் புதிதாக அரசு கலைக்கல்லூரிகளைத் தொடங்குவது வெகுவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டிலே, இராமநாதபுரத்திலும், வரும் ஆண்டிலே பரமக்குடியிலும் கல்லூரிகள் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே, உடனடியாகத் தொடங்குகிற வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு, அரசு நிதியுதவி பெறாத, தனியார் கல்லூரிகள்

தொடங்குவதற்கு, சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்குச் சில நிபந்தனைகளுடன் அரசு அனுமதியளித்து வருகிறது. அவ்வாறான கருத்துரு ஏதும் அப்பகுதியிலிருந்து வருமேயானால், அது முறைப்படி பரிசீலிக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. காஞ்சி பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் சுயநிதிக் கல்லூரிகள் தொடங்குவதற்கு முன்வந்தால் அரசு அனுமதி அளிக்குமா என்று நான் கேட்க எண்ணியதை அறிந்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அங்கேயிருந்து ஏதாவது தகவல் வந்தால் அது பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி ஒரு வேளை அங்கே இருக்கின்றவர்கள்—என்னுடைய தொகுதியைச் சார்ந்தவர்கள்—ஏதாவது முயற்சிகள் மேற்கொண்டால் அரசு உடனடியாக அதைக் கொடுப்பதற்கு முன்வருமா என மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களை, உறுப்பினர் அவர்கள் தகவல் வந்தால் செய்யப்படுமா என்று கேட்டார்கள். தகவல் வந்தால் செய்ய முடியாது. முறைப்படியான விண்ணப்பங்கள் வரப்பெற்றால் அவை உரிய முறையிலே பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் பேரவையின் முன்அனுமதியோடு நீட்டிக்கப்படுகிறது. வினா எண் 18, டாக்டர் ஜெ. பரந்தாமன், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் (குறுக்கீடு) அடுத்த கேள்வி திரு. ஜி. பழனிசாமி, அவை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கவேண்டும்.

18—

பேரணாம்பட்டு அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனைக்கு கட்டிடம் கட்டுதல்

***35710—டாக்டர் ஜெ. பரந்தாமன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--